**EX/REC/26/11**

**கிழக்கு மாகாண பொதுச்சேவையின் காணி நிருவாக திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவை வகுதிக்குள் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு காணப்படும் 13 வெற்றிடங்களுக்கு மாகாண திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் கிழக்கு மாகாண சபையின் www.ep.gov.lk ⟶ Exams ⟶ Online Application ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்கமுடியும். 2026.09.14 மு.ப. 9.00 மணி தொடக்கம் 2026.10.05 பி.ப. 10.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் எழுத்துமூலப்பரீட்சை நடாத்தப்படும்.

**02. ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள்:**

i. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

ii. இந்நியமனம் இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும் என்பதோடு கிழக்கு மாகாணத்தில் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

iii. இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். குடியேற்ற உத்தியோகத்தர் தரம் IIIக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iv. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

v. குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாண பொதுச்சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிப்பதாயின், திணைக்களத்தலைவருடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும். திணைக்களத்தலைவரினால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இந் நியமனம் புதிய நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

**03. பொதுவான தகைமைகள் :**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. ஏதேனும் சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர்.

iv. விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் குறைந்தது ஒரு வருடமாவது (01) தொடர்ச்சியான நிரந்தர வசிப்பிடத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் குறைந்தது மூன்று வருடங்கள் (03) தொடர்ச்சியாக வசித்துவரும் ஒருவரை திருமணம் செய்து கொண்டார் என்பதையும் திருமணத்திற்கு பின்னர் கிழக்கு மாகாணத்திற்கு குடிபெயர்ந்துள்ளார் என்பதையும் நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

v. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இவ் அறிவித்தலின் மூலம் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**04. வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**05. (i) கல்வித் தகைமைகள் :**

1). கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம் மொழி), விஞ்ஞானம் மற்றும் கணிதம் உள்ளடங்கலாக மற்றுமொரு பாடத்திலும் திறமைச்சித்திகள் அடங்கலாக ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

2). கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் உயிரியல்/கணிதம்/தொழில்நுட்ப துறைகளில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம், உயிரியல், விவசாயம் ஆகிய பாடங்களில் ஏதேனும் 02 பாடங்களை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடங்களிலும்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**(ii) தொழில் தகைமைகள் :**

1) குண்டசாலை, அங்குனகொலபெலச, பெல்வெகர, பிபில, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அநுராதபுரம், கரப்பிஞ்சா ஆகிய இடங்களில் உள்ள ஏதேனும் ஒரு விவசாய பாடசாலை ஒன்றிலிருந்து இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் கற்கை நெறியைப் பூரத்தி செய்தமைக்கான சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

2) கார்டி தொழில்நுட்பக் கல்லூரியில் விவசாயப் டிப்ளோமா சான்றிதழ் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தமைக்கான சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

3) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தமைக்கான சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

4) மேலே குறிப்பிட்ட தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என்று மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**06. சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25ஆம் திகதிய 10/2025இற்கு அமைவாக அரசாங்க நிர்வாகச் சற்றறிக்கையின் சம்பள தொகுதி MN 03-2025க்கு ஏற்ப குடியேற்ற உத்தியோகத்தர் சேவை தரம் III பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா. 52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 -10 x 1,350 – 100,040/- ஆகும். எவ்வாறாயினும் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரரொருவருக்கு இச்சம்பளத்திற்கு உரித்தாவது 2027.01.01ஆம் தினத்திலிருந்தாகும். நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து இச்சுற்றறிக்கை அட்டவணை IIIஇல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.

**07. ஆட்சேர்ப்பு முறை :**

i. கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட குடியேற்ற உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புத்திட்டம், அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் மற்றும் எழுத்துப்பரீட்சை மூலம் திறமை அடிப்படை என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் எவையும் வழங்கப்படமாட்டாது.

ii. மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்படுவர்.

iii. ஆட்சேர்ப்புக்கு தெரிவு செய்யப்படுபவர்களுள் விசேட தேவையுடையோருக்கான (மாற்றுத்திறனாளிகள்) ஒதுக்கீடு, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 27/88 இற்கமைய கவனத்தில் கொள்ளப்படும். அவ்வாறு பரீட்சாத்தியொருவர் நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றவதற்கு தனது உடல், உள நிலைமைகள் தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

**குறிப்பு :** நிகழ்நிலை விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும்போது குறித்த வகையில் தமது அங்கவீன புனர்வாழ்வு நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பிப்பதாக குறிப்பிடல் வேண்டும் என்பதுடன் அங்கவீனர் அல்லாத ஒருவர் பொய்யான முறையில் அங்கவீனர் என்று குறிப்பிடக்கூடாது.

**08. பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா. 1000/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை நிகழ்நிலையில் பதிவேற்றம் (upload) செய்ய வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப்பரிதியினை (Original Receipt) விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக்கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. அதேபோன்று காசுக்கட்டளை, முத்திரை என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**09. பரீட்சை நிபந்தனைகள் :**

i. பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை (online) ஆங்கில மொழி மூலத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பு பரீட்சைக்கான அறிவித்தலை (Advertisement) தரவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தங்களால் அனுப்பப்பட்ட நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற பின்னர் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் மென்பிரதியை செல்லுப்படியான பிரதியொன்றாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது / நிராகரிக்கப்பட்டுள்ளது என கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலலொன்றின் (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (e-mail) மூலமாகவே அறிவிக்கப்படும்.

ii. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலம் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

iii. பரீட்சை நடைபெறும் குறித்த காலப்பகுதிக்கு முன்னர் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை தொடர்பாக குறுஞ்செய்தியினூடாகவும் (SMS), மின்னஞ்சலூடாகவும் (E-mail) அறிவிக்கப்படும். அனுமதி அட்டையைப் பரிசோதித்து மாற்றங்கள் ஏதும் இருப்பின் 026-2228368 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற வகையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தம் தொடர்பாக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

iv. அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தியொருவர் இருப்பின், மேலே குறிக்கப்பட்ட தொலைபேசி எண்ணுடன் தொடர்பினை ஏற்படுத்தி பரீட்சையின் பெயர், விண்ணப்ப இலக்கம், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினை சரியாக குறிப்பிட்டு விசாரிப்பது மிகவும் பொருத்தமானது.

v. விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க இறுதித் திகதி வரையில் தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு எதிர்மறை விளைவுகளையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

vi. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது என்பதுடன், தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது அல்லது பொய்யான தகவல்களை வழங்கி பரீட்சைக்கு தோற்றுதல் தவறொன்றாக கருதப்படும்.

10. **விண்ணப்பிக்கும் முறை :**

i. நிகழ்நிலையில் (online) விண்ணப்பித்த பின்னர் அதன் அச்சுப் பிரதியை (Printout) தரவிறக்கம் செய்து, தரவிறக்கம் செய்த விண்ணப்படிவத்தில் தமது கையொழுத்தினால் பூர்த்தி செய்ய வேண்டியதை பூர்த்தி செய்தும், பற்றுச்சீட்டின் முலப்பிரதியை உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தியும் **"செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை"** என்ற முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னரோ அல்லது பின்னர் ஒரு வார காலத்திக்குள் எமக்கு கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை எதிர்கால தேவைக்காக தம்வசம் வைத்துக்கொள்வது அவசியமாகும்.

ii. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் EX/REC/26/11 என்பதை குறிப்பிடுவதோடு "கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் குடிநேற்ற உத்தியோகத்தர் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2026" என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

11. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணபதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அல்லது சமர்ப்பிக்க வேண்டிய தகவலை வேண்டுமென்றே சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். தமது கையொப்பத்தினை அரசாங்க பாடசாலை அதிபர், சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 854,880/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **கிழக்கு மாகாண அரச சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் சான்றுப்படுத்தி, அதனை திணைக்களத்தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

13. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
ஆ. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).
இ. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் முகத்தை மறைக்காது மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளும் வகையில் இருகாதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடியும் வரை பரீட்சை மேற்பார்வையாளரினால் அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

14. **பரீட்சைக்கு தோற்றுதல்:**

i. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

ii. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி தங்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தினை A4 தாளின் இருபக்கங்களையும் உபயோகித்து அச்சுப்பிரதியை (printout) எடுத்து இந்த அறிவித்தலின் 12ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக அனுமதி அட்டையில் தனது கையொப்பம் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

iii. பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமான பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

**15. பரீட்சைத்திட்டம் :**

எழுத்துப்பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களை கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**எழுத்துப்பரீட்சை :**

| வினாத்தாள் | மொத்தப் புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| பாடத்துறை சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 100 | 02 மணித்தியாலம் | 40% |

I. **நுண்ணறிவுப் பரீட்சை :** இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத்திறன், நேர முகாமைத்துவம் மற்றும் தீர்மானிக்கும் திறன் என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

II. **பாடத்துறை சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை** : இவ் வினாத்தாளானது கீழ்வரும் சட்டங்கள் தொடர்பான கட்டமைப்பு வினாக்கள் மற்றும் விடய ஆய்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

- 1935 இன் இலக்க 19 வது காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம் (1996 ஆம் ஆண்டு வரையான திருத்தங்களுடன் 1-76 வரையான பகுதி)
- 1979 இன் இலக்கம் 7 வது (ஆட்சியை மீள் பெறும்) அரச காணிச்சட்டம்
- 1947 இன் இலக்கம் 8 வது அரச காணி கட்டளைச்சட்டம்
- 1947 இன் இலக்கம் 32 வது நீர்ப்பாசன கட்டளைச்சட்டம் (1994 ம் ஆண்டு வரையான திருத்தங்களுடன்)
- 1907 இன் இலக்கம் 16 வது வனக்கட்டளைச்சட்டம் (2009 வரையான திருத்தங்களுடன்)
- 1980 இன் இலக்கம் 47 வது தேசிய சுற்றாடல் சட்டம் (2000 ஆம் ஆண்டு வரையான திருத்தங்களுடன்)

**குறிப்பு :**

இப்பரீட்சையில் தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்த பட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சாத்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**16. பரீட்சை நிலையம் :**

பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள **பரீட்சை நகரங்களும் அவற்றின் இலக்கமும்**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| திருகோணமலை | 01 |
| மட்டக்களப்பு | 02 |
| அம்பாறை | 03 |
| கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**17.** நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**18.** தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

**19.** இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது

விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவு தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் இறுதி முடிவு கௌரவ ஆளுநர் / கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் படி நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

**ஜே. லியாகத் அலி**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
14.09.2026